
# திராவிடத்தால் வாழ்கிறோம்

873

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

16

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை உருவாக்கிய கோல்வால்கர் 'நாம், நமது தேசத்தின் வரையறை' என்ற நூலில், "இந்துஸ்தானில் வாழக்கூடிய அனைவரும் இந்துக்கள். அவர்களுக்கான இனத்தின் அடையாளம் இந்தியர் அல்ல; இந்து என்பதுதான். இந்து மதத்தைச் சாராத பிற மதத்தினர் அனைவரும் அந்நியர்கள். அவர்கள் இந்துஸ்தான் என்ற பாரத தேசத்தில் வாழ வேண்டுமானால் இந்து கலாச்சாரத்தை மதிக்க வேண்டும்; அதற்கு அடிபணிய வேண்டும். இந்துக்கள் அல்லாத பிற மத அந்நியர்கள் தங்களுக்கான தனித்த அடையாளங்களை இழந்துவிட வேண்டும். இந்துக்கள் பெருமையை மட்டுமே பேச வேண்டும். இதை ஏற்க மறுக்கும் இந்துக்கள் அல்லாதவர்களுக்கு 'குடியுரிமை' கூட வழங்கக் கூடாது" என்று கூறியிருக்கிறார்.

இந்துக்கள் அல்லாத மற்றவர்கள், தங்களுக்கான தனி அடையாள உரிமைகளைக் கொண்டிருக்கக்கூடாது என்ற கோல்வால்கரின் கருத்தானது, இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை கூட வழங்கப்படக்கூடாது என்ற நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஆர்.எஸ்.எஸ். பிதாமகனான கோல்வால்கரின் அந்த நோக்கத்திற்கு ஒன்றிய பாஜக அரசு தந்த சட்ட வடிவம்தான் 'குடியுரிமை திருத்தச் சட்டம்'.

### மறுக்கப்பட்ட குடியுரிமை

2019-ஆம் ஆண்டு குடியுரிமை திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவையில் தாக்கல் செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. 2014 டிசம்பர் 31-ம் தேதிக்கு முன்பு பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்து, இந்தியாவில் குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர், ஜைனர்கள், பார்சி, கிறிஸ்தவ மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வழிவகை செய்தது அந்த மசோதா. அதேவேளையில் இஸ்லாமியர் குறித்தோ, இலங்கையில் இருந்து அகதிகளாக இந்தியாவிற்கு வந்த ஈழத்தமிழர்கள் குறித்தோ, அவர்களுக்கு குடியுரிமை வழங்குவது குறித்தோ அந்த மசோதா பேசவில்லை. அதாவது அவர்களுக்கு குடியுரிமை கிடையாது என்பதுதான் அதன் அர்த்தம்.

மதத்தின் அடிப்படையில் எப்படி குடியுரிமை வழங்கலாம் என்பதே இதில் அடிப்படை கேள்வியாக எழுந்தது. மதத்தின் பெயரில் பாகுபாடு காட்டக்கூடாது என்ற இந்திய அரசியலமைப்பின் நோக்கத்தை சிதைக்கும் விதமாக இது இருந்தது. அதேவேளையில் பாகிஸ்தான் அகமதியாக்களையும், மியான்மரின் ரோஹிங்யாக்களையும், ஈழத்தமிழர்களையும் புறக்கணித்ததில் இருந்தே குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் உள்நோக்கத்தை எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

### துரோகம் செய்த அடிமைகள்!

09.12.2019 அன்று மக்களவையிலும், 11.12.2019 அன்று மாநிலங்களவையிலும் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது. இஸ்லாமியர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் எதிரான இந்த மசோதாவை, தி.மு.க., காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், பகுஜன் சமாஜ், சமாஜ்வாடி, சி.பி.எம்., சி.பி.ஐ., தேசியவாத காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், ஆம் ஆத்மி, மக்கள் ஜனநாயகக் கட்சி, மதசார்பற்ற ஜனதா தளம் உள்ளிட்ட பட்டிருக்கும். ஆனால் ஆதரித்து வாக்களித்து வரலாற்றின் மீது அழியாத கரும்புள்ளியை அ.தி.மு.க. வைத்தது. நாடாளுமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ஓ.பி.ரவீந்திரநாத் (அன்றைய தேனி மக்களவைத் தொகுதி உறுப்பினர்) ஆதரித்து வாக்களித்தார். ஆனால் உட்கட்சி மோதல் காரணமாக, ஓ.பி.ரவீந்திரநாத்தை அ.தி.மு.க. உறுப்பினர்




# சி.ஏ.ஏ. சட்டத்தை எதிர்த்து நின்ற தி.மு.க.!

பல கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. நாடாளுமன்றத்தில் மிகக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள் தி.மு.க. எம்.பி.க்கள். ஒருவேளை மாநிலங்களவையில் அ.தி.மு.க. எதிர்த்து வாக்களித்திருந்தால் மசோதா நிறைவேறி இருக்காது. ஆனால் பா.ஜ.க. அரசுக்கு அடிபணிந்து ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள இந்த துரோகத்தை துணிந்து செய்தார் எடப்பாடி பழனிசாமி. அ.தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினராகி இருந்த அன்புமணி ராமதாஸும் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை.

இந்த மசோதாவுக்கு ஆதரவாக மாநிலங்களவையில் 125 வாக்குகளும், எதிராக 105 வாக்குகளும் பதிவாகின. அ.தி.மு.க.-வுக்கு அவர்களால் அனுப்பப்பட்ட அன்புமணியின் வாக்கோடு சேர்த்து 11 உறுப்பினர்களின் வாக்குகள் அன்றைக்கு இருந்தன. 11 பேரின் வாக்குகளும் எதிர்த்து பதிவாகி இருந்தால், எதிர்ப்பு வாக்குகள் 116-ஆகவும், ஆதரவு வாக்குகள் 115-ஆகவும் இருந்திருக்கும். மசோதா தோற்கடிக்கப்



> மக்களவையிலும், மாநிலங்களவையிலும், மக்கள் மன்றத்திலும் ஈடு இணையற்ற அளவில் இந்த மசோதாவை எதிர்த்து நின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

இல்லை எனக் கூறிவிட்டது எடப்பாடி பழனிசாமி அணி.

### பறிக்கப்பட்ட உரிமைகள்

உண்மையில் இச்சட்டத்தால் இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்கள் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்று பாரதிய ஜனதா கட்சி வாதிட்டது. ஆனால் ஐதராபாத்தில் மட்டும் 127 பேருக்கு ஆதார் அட்டையை ரத்து செய்ய நோட்டீஸ் அனுப்பியது ஆதார் ( UDAN) அமைப்பு. நோட்டீஸ் அனுப்பப்பட்ட 127 பேரில் பெரும்பாலானோர் இஸ்லாமியர்கள்; ஏனையோர் தலித் மக்கள். தங்களை இந்தியக் குடிமகன்தான் என்று நிரூபித்து ஆதார் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அடாவடி காட்டினர்.

அதேபோல, பெங்களூர் புறநகர் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த 300 இஸ்லாமியர்கள் சட்ட விரோதமாக குடியேறியவர்கள்; அவர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை என்று பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் புகார் தந்தார். அன்றைய கர்நாடக பா.ஜ.க. அரசின் காவல்துறை கண்களை மூடிக்கொண்டு அவர்களின் குடிசைகளை அகற்றியது.

இத்தகைய கொடும் சட்டத்திருத்தத்திற்கு எதிராக நாடு முழுக்க பற்றியெரிந்த போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. உத்தரப் பிரதேசத்தில், நடந்த போராட்டத்தில் காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தி இருபதுக்கும் மேற்பட்டோரைக் கொன்றது. இந்த துப்பாக்கிச்சூடு குறித்து சட்டமன்றத்தில் விவாதம் நடந்தபோது பேசிய முதல்வர் ஆதித்யநாத், "இவர்களை உ.பி. காவல்துறை சுடவில்லை; அவர்கள் சாவதற்காகவே போராட்டத்துக்கு வந்தவர்கள்; எனவே சாகத்தான் செய்வார்கள்; எங்கள் காவல்துறை துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டுகூட வெடிக்கவில்லை. போராட்டக்காரர்களே ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டார்கள்" என்று ஆணவத்தோடு பதிலளித்தார்.

ஆனால் மக்களவையிலும், மாநிலங்களவையிலும், மக்கள் மன்றத்திலும் ஈடு இணையற்ற அளவில் இந்த மசோதாவை எதிர்த்து நின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

...நீளும்

## ஆளுநரின் பேச்சும், ஒன்றிய அமைச்சரின் அடாவடியும்!

தமிழர்களின் தொன்மையை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, கீழடி அகழாய்வு உண்மைகளை மூடி மறைக்கும் வேலைகளையும் செய்து வருகிறது. சமீபத்தில் தமிழ்நாடு வந்த ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங், "கீழடி ஆய்வில் கூடுதல் தரவுகள் வேண்டும்" என கீழடி ஆய்வறிக்கையை ஏற்க அடாவடியாக மறுத்தார். அதற்கு எதிராக கழக மாணவர் அணி 'கீழடி தமிழர் தாய்மடி' என மாபெரும் ஆர்ப்பாட்டத்தினை நடத்தி இருக்கிறது.

இந்த நிலையில், கீழடி ஆய்வறிக்கையை எழுதிய ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் என்கிற பெயரில் அலைக்கழிக்கப்படுவதற்கு எதிராக கழகத் தலைவர், முதலமைச்சர் உள்பட தமிழர் நலனில் அக்கறை கொண்ட அரசியல் கட்சியினர் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழர்களின் பெருமையை செரித்துக்கொள்ள முடியாத அவர்கள்தான், ஆரிய சூழ்ச்சியாக தமிழர் தொன்மையை சிதைக்கவும், திரிக்கவும் முயல்கின்றனர். சமீபத்தில் திருச்சி அருகே ஒரு ஆன்மிக நிகழ்வில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வள்ளுவரை 'சனாதன தர்மத்தின் மிகப் பெரிய துறவி' என்று கூறி இழிவுபடுத்தினார்.

ஆளுநரின் அந்தப் பேச்சுக்கு மிகக் காட்டமாக கண்டனம் தெரிவித்திருந்தார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன். 'மெய் ஞானம் போதித்த வள்ளுவரை ஆன்மிகம் என்ற பெயரில் மனிதர்களுக்கு மதவெறியூட்டி, பகையும், வெறுப்பும் வளர்த்து வரும், சனாதனக் கும்பலின் மூலவராக காட்ட முயற்சிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் பேச்சு அறிவிலித்தனமானது' என கண்டித்திருந்தார்.

ஆளுநரின் பேச்சும் ஒன்றிய அமைச்சரின் பேச்சும் ஒரே நோக்கம் கொண்டவைதான். அதுதான் தமிழர்களின் தொன்மையை ஏற்க முடியாத ஆரியத்தின் சூழ்ச்சி. ஆனால், வரலாற்றை என்றைக்கும் மறைக்க முடியாது என்பது அவர்களுக்கு கீழடி காட்டும் உண்மை.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!



டி.எஸ்.சேகர்

2002-ஆம் ஆண்டு, முன்னாள் வடசென்னை மாவட்டச் செயலாளர் எல்.பலராமன் தலைமையில் பேராசிரியர் அவர்களின் 80-வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம், சென்னை தங்கசாலை மணிக்கூண்டு அருகில் நடைபெற்றது. கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றினார். ஆற்காட்டார் உள்ளிட்ட கழக முன்னணித் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அப்போது நான் துறைமுகம் பகுதி 30 வட்டப் பொருளாளராக பணியாற்றி வந்தேன். அந்த சமயத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– டி.எஸ்.சேகர், மாவட்டப் பிரதிநிதி
துறைமுகம் மேற்கு பகுதி தி.மு.க.
சென்னை கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சியில் எம்.சி.ராஜா!

நீதிக்கட்சி காலத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் 'நீதிக் கட்சியே தங்கள் கட்சி' என இணைந்து செயல்பட்டனர். 'திவான் பகதூர் ரெட்டமலை' சீனிவாசன், 'ராவ் பகதூர்' எம்.சி.ராஜா, 'ராவ் பகதூர்' என்.சிவராஜ் போன்ற தலைவர்கள் நீதிக்கட்சியில் இணைந்து சிறப்பாகச் செயல்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131